# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/26 - 2018 ජනවාරි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.01.04

*2052/26 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - மீளமைப்பு இலக்கம் 02

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2032/26 ஆம் இலக்க, 2017.08.16 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மீளமைக்கப்பட்ட, 1840/34 ஆம் இலக்க, 2013.12.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளமைப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

1. 7.3.2.1 பிரிவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிலீடு செய்ய வேண்டும் :

7.3.2.1 கல்வித் தகைமைகள்:- கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத தவணைகளில் ஆகக் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி மற்றும் கணிதம்/எண் கணிதம்/தூய கணிதம்/அடிப்படைக் கணிதம்/வர்த்தக எண் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. இணைப்பு 6 இன்கீழ் இல. 02, இல. 04 மற்றும் இல. 05 ஆகிய பகுதிகளில் 'பரீட்சை' என்பதற்குப் பதிலாக 'வினைத்திறன்காண் தடைப் பரீட்சை' என பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

3. இணைப்பு 06 தொடர்பாக இறுதியில் இல. 06 ஆக அதில் பின்வரும் விடயங்கள் சேர்க்கப்படுகின்றன :

06. அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் தொடர்பாக அரசாங்க சேவையின் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் அடங்கிய 10 நாட்களைக் கொண்ட பாடநெறி **I ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட 05 ஆண்டுகளுக்குள்** வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்பட்டதன் அடிப்படையில் I ஆம் தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு உரியதான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை சித்தியடைய வேண்டும் எனும் தேவைப்பாட்டில் இருந்து விடுவிக்கப்படுகின்றீர்கள்.

(i) பாடநெறியை நடாத்துகின்ற அதிகாரி 1 - இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

(ii) பாடநெறி நடாத்தப்படும் கால எல்லை - I ஆம் தரத்திற்கு உரிய பயிற்சிப் பாடநெறிக்கு உரியதான விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தல் ஒவ்வொரு வருடத்தினதும் முதற் காலாண்டில் பிரசுரிக்கப்படுவதோடு, அதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அளவினைக் கருத்திற்கொண்டதன் பின்னர் ஒரு வருடத்திற்கு நடாத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.


1A - G 26894 — 08 (2018/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(iii) பாடநெறியின் பாடத்திட்டம் :

| தொடர் இல. | நிரல் கூறு | காலம் |
|---|---|---|
| 01. | அரச சேவையின் ஒழுக்காற்று நடைமுறை விதிகள் | 02 நாட்கள் |
| 02. | அரச நிதி முகாமைத்துவம் மற்றும் சொத்து முகாமைத்துவம் | 03 நாட்கள் |
| 03. | அமைப்பாண்மை உற்பத்தித்திறன் | 02 நாட்கள் |
| 04. | பெறுகை செயன்முறை நடைமுறை | 02 நாட்கள் |
| 05. | தகவலறியும் சட்டம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு | 01 நாள் |

**குறிப்பு :**

(1) இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கமைய அரசாங்க சேவை பயிற்சி நிறுவகத்தின் மூலம் பாடநெறி நெறிப்படுத்தப்படுவதுடன், உரிய ஐந்து நிரல் கூறுகளையும் சிறப்பாகப் பூர்த்திசெய்தவன் மூலம் மாத்திரம் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் இருந்து விலக்களிக்கப்படும்.

(2) மேலும், அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையைப் பூர்த்தி செய்வது தொடர்பாக மேற்படி (01) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைதல் அல்லது (06) பகுதியின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறியின் பாடத்திட்டத்தின் கீழுள்ள 05 நிரல்கூறுகளையும் சிறப்பாகப் பூர்த்திசெய்தல், இவை தவிர பரீட்சையின் பாடங்கள் மற்றும் பாடநெறியின் பாடங்கள் இணைந்த பாடத்திற்குப் பாடம் விலக்களிக்கப்படும் அடிப்படையில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் இருந்து எவ்விதத்திலும் விலக்களிக்கப்பட மாட்டாது.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

01-521

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.